**கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**மூ.மு.எண்.6458/அ1/2023, நாள். .03.2024**

பொருள்: பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி- பணிவரன்முறை- கள்ளக்குறிச்சி, மாவட்டக்கல்வி அலுவலகத்தில் (தொடக்கக்கல்வி) இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.பா.ஐயப்பன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் -சார்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வித்துறை நாள்.09.09.2022
2. கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 801/அ1/2020 நாள்-17.09.2020.
3. கள்ளக்குறிச்சி, மாவட்டக்கல்வி அலுவலரின் (தொடக்கக்கல்வி) கடிதம் ந.க.எண்.2411/அ1/2023 நாள்.05.09.2023

******

கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி, மாவட்டக்கல்வி அலுவலகத்தில் (தொடக்கக்கல்வி) இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.பா.ஐயப்பன் என்பார் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி IV 2018-2019 மற்றும் 2019-2020-ன் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, கூகையூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 21.09.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். அன்னாருக்கு பார்வை 2-ல் கண்டவாறு கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரால் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளதால், அன்னார் பணியேற்ற நாளான 21.09.2020 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணைவழங்கப்படுகிறது.

மேலும் இவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலத்தை தகுதிகாண் பருவகாலமாக முடிக்கப்படவேண்டுமெனவும் தகுதிகாண்பருவகாலத்தில் முடிக்கப்பட வேண்டிய துறைத்தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படைப்பயிற்சி தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தகுதிகாண்பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பின்னர்தான் இரண்டாவது ஊதியஉயர்வு வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

-தபிபா-

பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படுவதுடன் அன்னாரது பணிப்பதிவேடு அசல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு- அசல் பணிப்பதிவேடு – 1 தொகுப்பு.

முதன்மைக்கல்வி அலுவலர்
கள்ளக்குறிச்சி

பெறுநர்- திரு.பா.ஐயப்பன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக்கல்வி அலுவலகம் (தொடக்கக்கல்வி),
கள்ளக்குறிச்சி. (உரிய வழியாக)

நகல்- மாவட்டக்கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி), கள்ளக்குறிச்சி மாவட்டம்.